பக்கங்கள் 19 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 10 சனிக்கிழமை 24.01.2026 | அதிர்வு 178

## வவுனியா மாவட்ட செயலகத்தில் தமிழ் ஊடகர்கள் புறக்கணிப்பு!

### சிங்கள ஊடகர்களுக்கு மட்டும் அழைப்பு என்று குற்றச்சாட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைச்சர்கள் கலந்து 03▶



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## தை பிறந்தால் வழி பிறக்கும்

# நம்பிக்கைதான் நம் வாழ்க்கை!

## திருமலை பொங்கல் விழாவில் சுமந்திரன் தெரிவிப்பு

(திருகோணமலை நிருபர்கள்)

“நம்பிக்கை இல்லை என்றால் வாழ்க்கையில் எந்த பிரயோசனமும் இல்லை. பொங்கல் விழாவிலே நாங்கள் ஈடுபடுகின்ற போது ஒரு எதிர்பார்ப்பை நாங்கள் வெளிப்படுத்துகின்றோம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதே இதனை உணர்த்துகின்றது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை பிரதேச சபையில் இன்று நடைபெற்ற பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து 03▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# வவுனியாவில் பொலிஸாரை மோதி விட்டு தப்பியோடிய வான் சாரதி மடக்கிப் பிடிப்பு

## இரு போக்குவரத்துப் பொலிஸார் காயம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற சிறிய ரக வாகனம், துரத்திச் சென்ற போக்குவரத்துப் பொலிஸாரை மோதி விட்டு தப்பிச் செல்ல முயன்ற சம்பவம் இன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு போக்குவரத்துப் பொலிஸார் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார், பயணித்துக் கொண்டிருந்த சிறிய ரக வாகனம் ஒன்றை நிறுத்த முயன்றுள்ளனர். எனினும், அந்த வாகனம் பொலிஸாரின் கட்டளையைப் பொருட்படுத்தாது பயணத்தைத் தொடர்ந்துள்ளது.

இதையடுத்து, போக்குவரத்துப் பொலிஸார் குறித்த வாகனத்தை துரத்திச் சென்ற நிலையில், வாகனம் பொலிஸார் மீது மோதி விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் போக்குவரத்துப் பொலிஸார் இருவரும் தூக்கி வீசப்பட்ட நிலையில் காயமடைந்துள்ளனர். அவர் களது மோட்டார் சைக்கிள் அந்த வாகனத்தின் கீழ் சிக்கி சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன் பின்னர், வாகனத்தின் சாரதி வாகனத்தை அங்கேயே விட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

காயமடைந்த போக்குவரத்துப் பொலிஸார் இருவரும் சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தப்பிச் சென்ற சாரதி, வவுனியா – ஏ 9 வீதி பூஓயா பாலத்துக்கு அருகிலுள்ள இராணுவ முகாம் பகுதியை அண்மித்த பகுதியில் சென்றபோது, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும், சம்பந்தப்பட்ட வாகனத்தையும் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த ஈரப்பெரியகுளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.













# ஆஸ்திரேலிய தினக் கொண்டாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பங்கேற்பு!

ஆஸ்திரேலிய தினக் கொண்டாட நிகழ்வு, கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கலந்துகொண்டார்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மற்றும் அன்னாரின் பாரியார் ஆகியோரின் கௌரவ அழைப்பை ஏற்றே அவர் இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரசியல் வாதிகள் உள்ளிட்ட தரப்பினர் இங்கு கூடியிருந்தனர்.





## நம்பிக்கைதான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது தலைவர் இரா.சம்பந்தன் ஐயா எப்போதும் பொங்கலுக்குத் தீர்வு, தீபாவளிக்குத் தீர்வு என்ற விடயத்தை ஏன் அவர் சொன்னார்? பொங்கல் விழாவில் ஈடுபடுகின்றபோது ஒரு எதிர்பார்ப்பையே அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

வாழ்க்கையில் நம்பிக்கையோடு பயணித்தால் மாத்திரமே நாங்கள் வெற்றி பெற முடியும். இதனையே எமது தலைவர் இரா. சம்பந்தன் ஐயா பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் தெரிவித்தார்.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இந்தக் கட்சியினுடைய



பொங்கல் விழாவிலே ஒரு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்ற அதே தருணத்தில் நாங்கள் இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம்.

தனித்துவத்தைப் பேண வேண்டிய ஒரு கட்டாய கடமை எங்களுடைய கட்சிக்கு இருக்கின்றது. ஆகவே, ஒற்றுமையாக இருக்க வேண்டிய இடத்தில் நாங்கள் ஒற்றுமையுடன் செயற்படுவோம்.

ஒற்றுமையாகச் சேர்ந்து செல்பவர்களுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து பயணிக்க வேண்டும். ஒற்றுமையாக இருக்க முடியாத இடங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கவே கூடாது. அதுவே எமது நோக்கம்.” – என்றார்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் கூட்டங்கள் மற்றும் ஊடகச் சந்திப்புகளுக்குதமிழ்ஊடகவியலாளர்கள் அழைக்கப்படுவதில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிகழ்வுகளுக்கு சிங்கள ஊடகவியலாளர்கள் மட்டுமே அழைக்கப்படுகின்றனர் எனவும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சமீபத்தில் வவுனியாவுக்கு வருகைதந்த நீதித்துறை அமைச்சர் மாவட்ட செயலகத்தில் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தினார். அந்த ஊடகச் சந்திப்பில் சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்துகொண்ட போதிலும், எந்தவொரு தமிழ் ஊடகவியலாளருக்கும் அழைப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் தொடர்பாடல் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ச்சியாகப் பல அரச நிகழ்வுகளிலிருந்து தமிழ் ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட செயலகத்தின் கவனத்துக்குப் பல தடவைகள் கொண்டு சென்றிருந்த போதிலும், இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை எனத் தமிழ் ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்திடம் முறையிடவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் மேலும் கூறியுள்ளனர்.



# 3 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச சட்ட மாநாடு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் இந்தியாவின் பிரசித்தி பெற்ற சுரானா சட்ட நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தும் “3 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச சட்ட மாநாடு - 2026“ இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹுவர் கலையரங்கில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விசேட அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

சுரானா சட்ட நிறுவனத்துடன் இணைந்து 2024ஆம் ஆண்டில் முதலாவது சட்ட மாநாட்டை நடத்திய யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை, 2025இல் இரண்டாவது மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தியிருந்தது. அதன் தொடர்ச்சியாக, சர்வதேச சட்ட நிபுணர்களை இணைத்து மூன்றாவது முறையாக இம்முறை 2026ஆம் ஆண்டிற்கான மாநாட்டை இன்றும் நாளையும் நடத்துகின்றது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமான இம்மாநாட்டின் முதல் நாள்

தொடர்ச்சி▼
















# 3 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச சட்ட மாநாடு

தொடர்ச்சி▲

அமர்வுகளில், நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறையின் உயர்மட்டப் பிரதி நிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர் சிதம் பரம்பிள்ளை துரைராஜா மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹித்த அபேசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச் சின் மேலதிக செயலாளர் திருமதி சரண்யா ஹசந்தி உருகொடவத்தே திசா நாயக்க மற்றும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ சாய் முரளி, யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா மற்றும் சட்டத்துறையின் தலைவர் திருமதி கோசலை மதன், இவர்களுடன் சட்டத் துறை சார்ந்த விரிவுரையாளர்கள், சட்டத் தரணிகள், மாணவர்கள் மற்றும் வெளி நாட்டுப் பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.




















## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பரிதவிக்கும் சமூகம்

மட்டக்களப்பு கல்லடி பழைய பாலத்தின் மேல் இருந்து நேற்று இரவு 7.15 மணியளவில் 20 வயதுடைய இளம் யுவதி ஒருவர் வாவியில் பாய்ந்து நீரில் மூழ்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவர் நேற்று வெள்ளிக்கிழமை இரவே சடலமாக மீட்கப்பட்டமையை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 23 தினங்களில் 16 தற்கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மாவட்டத்தில் தொடர்ச்சியான தற்கொலை இடம்பெற்று வருவதையடுத்து பொதுமக்கள் அதிகம் கவலையடைந்துள்ளனர்.

தற்கொலை வீதம் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை நாலாம் இடத்தில் உள்ளது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரிசைப் பட்டியலை தெரிவிக்கின்றது. புள்ளி விவரங்களின்படி உலகளாவிய ரீதியில் தற்கொலை செய்து கொள்வோரின் வீதம் சராசரியாக ஒரு லட்சம் பேரில் 11 ஆக உள்ள போதிலும் இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை சராசரியாக ஒரு லட்சம் பேரில் 28.8 ஆக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஐம்பது வீதமானோர் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ள போதைக்கு அடிமையானவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

இலங்கையர்களிடையே மனச்சோர்வு (Depression) விகிதங்கள் கவலையளிக்கும் நிலையை எட்டியுள்ளன எனப் புதிய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. பேராதனை மற்றும் களனிப் பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய ஆய்வு முடிவுகளின்படி, இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 19.4 வீதத்தினர் மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஆசிய பிராந்தியத்தின் சராசரியான 16.1 வீதம் என்ற அளவைவிட அதிகமாகும். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் இதன் தாக்கம் மிகவும் தீவிரமாக உள்ளது. 10 முதல் 24 வயதுக்குட்பட்ட இலங்கையர்களில் 39 வீதத்தினர் மனச்சோர்வுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்விடயத்தில் சுகாதார சேவைகளில் உள்ள பெரிய இடைவெளியை, அரச மனநல மருத்துவர்கள் கல்லூரி 2023 இல் வெளியிட்ட தனி ஆய்வு ஒன்று சுட்டிக்காட்டுகிறது.

19 வயதுக்குட்பட்டவர்களில் 7 வீதத்தினர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர் என்றும், 35 வீதத்தினர் தனிப்பட்ட வன்முறையைப் பற்றித் தெரிவித்துள்ளனர் என்றும் ஆய்வறிக்கை கூறுகிறது. இதன் காரணமாக, இளைஞர்களுக்கான மனநல சேவைகள் குறித்து அவசரமாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

மூன்று தசாப்தகால யுத்தத்தின் விளைவுகள், போரின் முடிவின் பின்னரான மக்களின் வாழ்க்கை முறை, பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளுமாக சமூகம் சீரழிந்து கிடக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் போதைப்பொருள் பாவனை என்ற புதிய அரக்கன் சமூகத்தைப் பற்றிப் பீடித்து மேலும் மோசமாகச் சீரழித்து வருகிறான். அந்தச் சீரழிவில் இருந்து தப்ப முடியாத நமது இளம் சமூகம் மனச்சோர்வு, மன உளைச்சல், மனக் குழப்பம் ஆகியவற்றின் உச்சத்தில் தற்கொலையை நாடும் ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்கான தீர்க்கமான நடவடிக்கைகள் அவசரமாகவும் அவசியமாகவும் எடுக்கப்பட வேண்டும்.





## இயற்கையின் நண்பன் மண்புழு

# மண்புழு உற்பத்தியின் மகத்தான சாதனை!



விவசாயிகளின் நண்பன், இயற்கை உழவன் என்று அழைக்கப்படும் மண்புழு இன்றைய காலத்தில் இரசாயன பசளைகளின் பாவனை காரணமாகழிந்து வருவதோடு இயற்கை விவசாயமும் குறைவடைந்து செல்கின்றது. இருந்த போதிலும் ஒரு சிலர் இவ்வாறான இயற்கை விவசாயத்திலும் மண்புழுஉரம் தயாரிப்பதிலும் மண்புழு திரவம் தயாரிப்பதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே மண்புழுஉரம் தயாரிக்கின்ற சரவணமுத்து சிவனேசனுடன் மண்புழு தயாரிப்பது தொடர்பான சில கேள்விகள் கேட்கப்படுகின்றன.

**கேள்வி :** உங்களுடைய பெயர் மற்றும் நீங்கள் செய்யும் தொழில் என்ன?

**பதில்:** என்னுடைய பெயர் சரவணமுத்து சிவனேசன். நான் 1980 ஆம் ஆண்டு போதனாசிரியராக பணியில் இணைந்து சிறுநீர்பாசன திட்டத்தின் கீழ் நீர்முகாமைதத்துவ அலுவலகராக பணிபுரிந்து, அதன்பின் பாடவிதான உத்தியோகத்தர், பண்ணை முகாமையாளராகக் கடமையாற்றி இறுதியாக உதவி விவசாய பணிப்பாளராகக் கடமையாற்றி பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

**கேள்வி:** மண்புழு உரம் தயாரிப்பில் எப்போது இருந்து ஈடுபட்டு வருகிறீர்கள்?

**பதில்:** 1990 ஆம் ஆண்டு ஆண்டில் கண்டியில் பேராதனையிலுள்ள கலகா விவசாய பயிற்சி நிலையத்தில் இந்த மண்புழு செய்வது தொடர்ப்பான பயிற்சி பெற்று தற்போது வரை செய்து வருகின்றேன்.

**கேள்வி:** இந்தத் துறையில் ஈடுபட காரணம் என்ன?

**பதில்:** விவசாயத்தில் முக்கியமான ஒரு விடயதானமாக மண்புழு உரம் தயாரிப்பது காணப்படுகின்றது. மண்புழு உற்பத்தியில் ஆரம்ப காலத்தில் மண்புழு உரம் தயாரிப்பில் ஈடுபாடு காணப்பட்டது. இருந்தபோதிலும் சில காரணிகளால் காரணமாக மண்புழு உரம் தயாரிப்பதில் தொய்வுநிலை காணப்பட்டது. எனவே அதற்கு புத்துயிர் அளிக்கவேண்டும் என்பதற்காகவும், நான் பெற்ற அனுபவத்தினை மற்றவர்கள் அறிவதற்காகவும், புதிதாக ஆரம்பிப்பவர்களுக்கு தரமான மண்புழுக்களை வழங்குவதற்காகவும் திரும்ப ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு ஆசையில் இந்த மண்புழு உரத்தை தயாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:** மண்புழு உரம் என்றால் என்ன?

**பதில்:** மண்புழுவானது இயற்கையாக கிடைக்கின்ற இலைகுலைகள் மற்றும் விலங்குகளின் எருக்களை உணவாக உட்கொண்டு அது இடுகின்ற எச்சங்கள் மண்புழு உரமாக மாறுகின்றது. அதாவது சிதைவடைகின்ற தாவரங்களின் கழிவுகளை சாப்பிட்டு அது சமீபாடடைந்து அதனுடைய குடல் சுரப்புகளையும் சேர்த்து தருவதுதான் மண்புழு உரம்.

**கேள்வி:** சாதாரண உரங்களுடன் ஒப்பிடும் போது மண்புழு உரத்தின் முக்கிய சிறப்புகள் என்ன?

**பதில்:** சாதாரண கூட்டுடெரு, உக்கியபசளைகளை விட மண்புழுவின் முக்கியத்துவம் என்னவென்றால் மண்புழுவின் குடலில் இருந்து சமீபாடடைந்து வருகின்ற உரத்தை பயிர்களுக்கு உடனடியாக பாவிக்க கூடியதாக காணப்படுகின்றது. ஒரு பயிருக்கு 16 மூலங்கள் மேற்பட்ட அளவு தேவைப்படுகின்றது. மண்புழு உரத்தில் சகல விதமான கழிவுகளையும் சாப்பிட்டு வெளியிடுவதால் 16 மூலகங்களும் மண்புழு உரத்தில் காணப்படுகின்றது. அதனாலே மற்ற பசளைகளோடு ஒப்பிடும் போது மண்புழு உரம் புதுமையாக இருக்கின்றது.

**கேள்வி:** எந்த வகையான மண்புழுக்கள் இதில் பயன்படுத்தப்படுகின்றன?

**பதில்:** மண்புழுக்களில் பலவகையான மண்புழுக்கள் காணப்படுகின்றன. “Eisenia foetida போன்ற சிவப்பு மண்புழுக்கள் உரம் தயாரிப்பிற்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. இவை பெரும்பாலும் சிறிய அளவிலான புழுக்களாக காணப்படுகின்றன. அத்தோடு இவை விரைவாக இனப்பெருக்கத்தினை மேற்கொள்கின்றன. இது அதிகளவான உற்பத்திகளை தருவதனால் சிவப்பு (Red Worms ) மண்புழுக்களை அதிகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி :** மண்புழு உரம் தயாரிக்க தேவையான மூலப்பொருள்கள் என்னென்ன?

**பதில்:** மூலப் பொருள்கள் என்று சொல்லுகின்ற பொழுது இரசாயனங்கள் கலக்கப்படாத சேதன பசளைகளான விலங்குக் கழிவுகள் (ஆட்டெரு, மாட்டெரு) மரக்கறி கழிவுகள் மற்றும் இலைகுலைகள் உக்கக்கூடிய பொருட்கள் யாவும் மண்புழு உரத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இதில் பகுதி அளவு சிதைவடைந்த பொருட்களை மண்புழு உரம் தயாரிப்பதில் இட்டால் அதிகளவில் குறுகிய காலத்தில் உரத்தினை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்

**கேள்வி:** மண்புழு உரம் செய்வதற்கான இடம் எவ்வாறு இருக்க வேண்டும்?

**பதில்:** மண்புழுவுக்கு தேவையான சுவாத்தியம் என்ன என்பதை பார்க்க வேண்டும். மண்புழுவுக்கு

தொடர்ச்சி

## இயற்கையின் நண்பன் மண்புழு

# மண்புழு உற்பத்தியின் மகத்தான சாதனை!

தொடர்ச்சி

கடும் குளிரும் கடும் வெப்பமும் கூடாது. மண்புழுவுக்கு அளவான ஈரப்பதன் இருக்க வேண்டும். அதற்கேற்ற வெப்பநிலை இருந்தால் தான் அது சுவாசிப்பதற்கும் அது தனது தொழிற்பாட்டை மேற்கொவதற்கும் உதவும். அத்தோடு அளவான காற்றோட்டமான பகுதியில் இந்த இடம் தயாரிப்பை மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி :** உரம் தயாராக எவ்வளவு காலம் ஆகும்?

**பதில்:** மண்புழுக்களின் எண்ணிக்கையும் அதற்கு இதமான உணவு வசதிகள் கிடைக்குமானால் குறைந்தது ஒன்றை மாதத்தில் உரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி :** மண்புழுக்களை பராமரிக்க முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன?

**பதில்:** ஈரப்பதனை சிறந்த முறையில் பேண வேண்டும். அதிகளவு ஈரமும் கூடாது. அதற்கு ஏற்றார் போல் அதற்கு தக்க வகையில் வெப்பநிலை காணப்பட வேண்டும். அத்தோடு இடையிடையே மண்புழு குவியலை கிளறி விட வேண்டும். அவ்வாறு செய்யும் போது மண்புழுவுக்கு காற்றோட்டம் கிடைக்கின்றது. இயற்கை எதிரிகள் மண்புழுவை உண்ணுவதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக பகலிலே ஓணான், அரணை, உடும்பு, பல்லி மற்றும் கடி எறும்புகளும் இரவுகளில் எலி, அகுளான் தாக்காத வகையில் பாதுகாக்க வேண்டும்.

**கேள்வி:** நல்ல தரமான மண்புழு உரத்தை எவ்வாறு அடையாளம் காணலாம்?

**பதில்:** நாங்கள் பாவிக்கும் மூலப் பொருள்களை வைத்தே தரமானது தரமற்றது என்று நாங்கள் கூற முடியும். ஆடு மாடுகளின் உடைய எருக்களை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிப்போமானால் அவை சிறந்தவையாக காணப்படும். அத்தோடு சிலவகை இலை குலைகளை மட்டும் வைத்து மண்புழு உரம் தயாரிப்போமானால் அதனுடைய தரம் குறைவாக காணப்படும்.

**கேள்வி:** இந்த உரத்தை எந்த பயிர்களுக்கு பயன்படுத்தலாம் எந்த அளவுகளில் பயன்படுத்த முடியும்?

**பதில்:** அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்த முடியும். சாதாரணமாக ஒரு கடக உரம் பாவிக்கின்ற இடத்தில் நான்கில் ஒரு பங்கு மண்புழு உரத்தை பயன்படுத்த முடியும்.

**கேள்வி :** மண்புழு உரம் தயாரிப்பிற்கு ஆரம்ப முதலீடு எவ்வளவு தேவை?

**பதில்:** பெரிய அளவில் முதலீடு தேவையில்லை. குறிப்பாக சிறியளவில் செய்வதாயின் பொலித்தினால் செய்யப்பட்ட தொட்டிகள், பெரல்களும் பரந்த அளவில் மண்புழு உரத்தை தயாரிப்பதானால் சீமெந்தினால் தொட்டி ஒன்று அமைத்து அதற்குள் மண்புழுவை அதிகளவு மண்புழுவை விட்டு வளர்க்க முடியும். இருப்பினும் இச்செயற்பாட்டிற்கு மூலதனம் குறைவாகவே முடிகின்றது. சிறிய தொட்டியில் ஒரு கைபிடி மண்புழுக்களை விடுகின்ற போது அது பெருகி அடுத்த தடவை மண்புழு உரம் தயாரிப்பதற்கு அதிகளவான மண்புழுக்களை பெருக்குகின்றது. ஆகவே மூலதனம் பெரிதளவில் தேவையில்லை.

**கேள்வி:** மண்புழு உரத்தினுடைய விற்பனை எவ்வாறு காணப்படுகிறது?

**பதில்:** சாதாரணமாக பார்க்கின்ற பொழுது மண்புழு உரத்தை உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள்களின் பெறுமதியானது குறைவாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் மண்புழு உரத்தின் விலையானது ஒரு கிலோ ரூபா 80 தொடக்கம் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. பாவனையாளர்களுக்கு மண்புழு உரத்தினுடைய தரத்தில் தயக்கம் காணப்படுவதாலும் அதிகளவான விலையில் விற்பதனாலும் சந்தையில் மந்தநிலை காணப்படுகின்றது.

**கேள்வி:** இளைஞர் யுதிகள் இந்த மண்புழு உரத்தைத் தயாரித்து ஒரு தொழில் வாய்ப்பை உருவாக்க முடியுமா??

**பதில்:** ஆம் இது ஒரு முழு நேர தொழில் அல்ல. இதனை பொழுதுபோக்காகவே செய்தால் பெரிய அளவு இலாபத்தைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். அத்தோடு இந்த தொழிலில் ஈடுபடுவதால் இவர்களுடைய மனம் இலகுபடுவதோடு மன அழுத்தம் போன்ற பிரச்சினைகள் காணப்படாது.

**கேள்வி:** மண்புழு உரம் தயாரிப்பதில் அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களினுடைய பங்கு எவ்வாறு காணப்படுகின்றது?

**பதில்:** அரசாங்கம் மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இருந்தபோதிலும் மக்கள் இதனை பெரிதளவில் எடுத்துக் கொள்ளவில்லை. எனது அபிப்பிராயம் என்னவென்றால் இந்த உரத்தை பாவிப்பதால் ஏற்படுகின்ற நன்மை பற்றிய விழிப்புணர்வு இன்மையே முக்கிய காரணமாக காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யவேண்டுமென்றால் விவசாயிகளே உரத்தை தயாரித்து பயன்படுத்தி அதன் நன்மைகளை ஏனையவர்களுக்கு அறிய செய்யவேண்டும். அத்துடன் மண்புழு தயாரிப்பதில் சிறந்து விளங்குகின்ற உற்பத்தியாளர்களை அடையாளம் கண்டு அவர்களை அழைத்து வந்து புதியவர்களுக்கு வதிவிட செய்முறை பயிற்சிகளை வழங்கலாம். அத்துடன் இந்த உரத்தினை பாவிக்கின்ற விவசாயிகளின் இடங்களுக்கு களப் பயணங்களை ஒழுங்குபடுத்தி (குறிப்பாக இளைஞர், யுவதிகள்) அதனை சென்று பார்வையிட செல்வதன் ஊடாக மண்புழு உர உற்பத்திகளை மேம்படுத்தலாம் என்பது என்னுடைய கருத்து.

அத்தோடு பிரதேச சபை மற்றும் மாநகர சபைகள் பல வகையான இயற்கை கழிவுகளை சேகரிக்கின்றார்கள். அவற்றை அவர்கள் சேகரிக்கின்ற பொழுது மண்புழு உரத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்த கூடிய கழிவுகளை தனியாக சேகரித்து மண்புழு உற்பத்தி செய்பவர்களுக்கு வழங்கலாம். அல்லது அவர்களே மண்புழு உரத்தைத் தயாரிக்கலாம் . அவ்வாறு செய்யும்போது மண்புழு உரமானது அதிகளவில் விற்பனைக்குச் சந்தைக்கு வரும். பல உள்ளூராட்சி மன்றங்களுக்கு போதியளவு இலாபத்தை ஈட்டி கொடுக்கும் வழிமுறையாக காணப்படுகின்றது.

அத்தோடு மண்புழு உரத்துடன் மண்புழு திரவமும் கிடைக்கப்பெறுகின்றது. மண்புழு திரவம் என்பது மண்புழுவின் மேற்பரப்பில் சுவாசிப்பதற்காக காணப்படுகின்ற சுரப்புகளைக்கழுவி எடுக்கப்படுகின்ற திரவமாகக் காணப்படுகின்றது. இது பூச்சிக்கொல்லி மற்றும் பசளையாக காணப்படுகிறது. மண்புழு உரம் மற்றும் மண்புழு திரவம் ஆகியவற்றின் தரத்தை இது சார்ந்த ஆய்வு நிறுவனங்கள் ஆய்வு செய்து தரச்சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் இதன் விற்பனையையும் பயன்பாட்டையும் அதிகரிக்க முடியும். அத்தோடு இயற்கை விவசாயம் பல மடங்கு முன்னேறும் என்பதில் ஐயமில்லை.



**இரா.வர்ணன்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்




# அனுமதியின்றி மணல் ஏற்றியோருக்கு ரூ. ஒரு லட்சத்து 10 ஆயிரம் தண்டம்!

(பாறுக் ஷிஹான்)

சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 உழவு இயந்திர சாரதிகளுக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் தண்டப்பணம் விதித்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறகர் பகுதியில் அனுமதி வழங்கப்படாத இடத்தில் மண் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, கடந்த வியாழக்கிழமை சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பொலிஸ் குழுவினரும் மல்வத்தை விசேட அதிரடிப்படையினரும் இணைந்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதுமண்அகழ்வில்ஈடுபட்டவர்கள் தப்பி செல்வதற்காக உழவு இயந்திரத்துடன் வீதி வழியாக சென்ற போது குறித்த சோதனை நடவடிக்கையில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அத்துடன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர். 3 உழவு இயந்திரங்களுடன் 3 சந்தேக நபர்களையும் மணலுடன் கைது செய்து சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்குக் அழைத்துச் சென்றனர்.

கைதான மூவரும் 3 உழவு இயந்திரங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள் யாவும் சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் நூர்டீன் முஹம்மட் சர்ஜூன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது.

# வீதி அபிவிருத்தித் திட்டம் கிண்ணியாவில் ஆரம்பிப்பு!




அரசின்கிராமியவீதிகள்அபிவிருத்திக்கான தேசிய வேலை திட்டத்தின் கீழ் கிண்ணியா நகர சபை எல்லைக்குள் காணப்படும் 5 கிலோ மீற்றர் வீதிகளை புனரமைப்பு செய்யும் தேசிய வேலை திட்டமானது வீதி பிவிருத்தி அதிகார சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் கிண்ணியா நகர சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் பைசல் நகர், அண்ணல் நகர், ஆலங்கேணி, மாஞ்சோலைச் சேனை போன்ற பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கூடுதல் நீளங்களை கொண்ட வீதிகள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

அதன் அடிப்படையில் முதலாவதாக கூபா நகர் ஜும்ஆ பள்ளியின் முன்னாலுள்ள 870 மீற்றர் நீளமான வீதியை புனரமமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எம்.எம்.மஹ்தி கலந்து கொண்டு இதனை ஆரம்பித்து வைத்தார்.

நீண்டகாலமாகப்புனரமைப்புசெய்யப்படாத வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உழவு இயந்திரம் கொண்டு கரைவலை தொழிலில் ஈடுபடுவதற்கு வடமராட்சி கிழக்கில் தடை விதிப்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி கரைவலை தொழில் ஈடுபடுவதை நிறுத்துமாறு நீரியல்வளத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழில் ஈடுபடுவதால் சிறு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவந்த நிலையில் உழவு இயந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழிலில் ஈடுபடுவது தடை செய்யப்படுகிறது. கடந்த காலத்தில் வழங்கப்பட்ட உழவு இயந்திரத்தை பயன்படுத்தி கரவலை தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது. குறித்த தடை நாடு முழுவதுக்குமானது எனவும் நீரியல்வளத் திணைக்களம் அறிவித்துள்ளது. இருந்தும் வடமராட்சி கிழக்கின் ஒரு சில பகுதிகளில் தற்போதும் உழவு இந்திரத்தை பயன்படுத்திக் கரைவலை தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# மன்னார் மக்களின் குரலில் எதிரொலிக்கும் மாற்றமும் சவால்களும்

மன்னார் மாவட்டத்தின் இன்றைய நிலையை நேரில் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் போது, பல தரப்பட்ட மக்களுடனான உரையாடல்கள் பல கசப்பான உண்மைகளையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தின.

மன்னார் தீவின் நுழைவாயிலில் எம்மை வரவேற்ற மீனவ சமூகத்தினர், தமது வாழ்வாதாரம் இன்று பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகக் கவலை தெரிவித்தனர்.

பல தசாப்தங்களாகக் கடலையே நம்பி வாழும் இவர்கள், இந்திய இழுவை மடிப் படகுகளின் ஊடுருவலாலும், உள்ளூர் கடற்பரப்பில் அதிகரித்து வரும் சட்ட விரோத மீன்பிடி முறைகளாலும் தமது வலைகளில் மீன்கள் தங்குவதில்லை எனத் தெரிவித்தனர்.

குறிப்பாக, “கடல் வளங்கள் அழிக்கப்படுவதால் எமது அடுத்த தலைமுறைக்கு மீன்பிடித் தொழிலைக் கடத்த முடியுமா?” என்ற ஏக்கமான கேள்வி மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் பேச்சில் பிரதானமாக ஒலித்தது.

இயற்கை ஆர்வலர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களுடனான உரையாடல்கள் மன்னாரின் தற்போதைய சூழலியல் மாற்றங்கள் குறித்துப் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சின. மன்னாரில் முன்னெடுக்கப்படும் பாரிய காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்கள் குறித்துப் பேசிய சூழலியலாளர்கள், இவை உலகளாவிய ரீதியில் இடம்பெயரும் பறவைகளின் வாழ்விடங்களைச் சிதைப்பதாகக் குறிப்பிட்டனர். அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கையான மணல் திட்டுகளும், நிலத்தடி நீர் வளமும் கனிமணல் அகழ்வு போன்ற திட்டங்களால் பாதிக்கப்படுவதை அவர்கள் சுட்டிக்காட்டினர். “அபிவிருத்தி என்பது மக்களுக்கு நன்மையாக அமைய வேண்டுமே தவிர, அவர்களின் வாழ்விடங்களைச் சுடுகாடாக்கக் கூடாது” என்பதே அவர்களின் ஒட்டுமொத்தக் குரலாக இருந்தது.

மறுபுறம், மன்னாரின் வர்த்தகச் சமூகத்தினர் மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்தோர் மாவட்டத்தின் பொருளாதார வாய்ப்புகள் குறித்துச் சில சாதகமான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

தலைமன்னார்வரை நீளும் ரயில் சேவை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் கோட்டை போன்ற இடங்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஆற்றல் கொண்டவை என அவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும், முறையான தங்குமிட வசதிகள் இல்லாமை மற்றும் வரலாற்று இடங்கள் பராமரிப்பின்றிச் சிதைவடைந்து வருவது பெரும் குறையாக முன்வைக்கப்பட்டது.

அரசு இந்தப் பகுதியின் சுற்றுலா உட்கட்டமைப்பை மேம்படுத்தினால், மன்னார் வடபகுதியின் முக்கிய பொருளாதார மையமாக மாறும் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

இறுதியாக, மன்னாரின் கல்விச் சமூகம் மற்றும் இளைஞர்களுடனான நேர்காணல்கள், அங்கு நிலவும் தொழில்வாய்ப்புப் பற்றாக்குறையை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டின. பட்டம் பெற்ற பல இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படுவதை அவதானிக்க முடிந்தது. “எங்கள் மாவட்டத்தின் வளங்கள் சுரண்டப்படுகின்றன, ஆனால் எமது இளைஞர்களுக்கு இங்குள்ள திட்டங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை” என்ற ஆதங்கம் இளைஞர்கள் மத்தியில் மேலோங்கியிருந்தது.

மொத்தத்தில், மன்னார் மாவட்டம் நவீன மாற்றங்களை நோக்கிப் பயணித்தாலும், அந்த மாற்றம் மக்களின் தேவைகளையும் சூழலையும் உள்வாங்கியதாக இருக்க வேண்டும் என்பதே கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவாகும்.



பொனிஸ்ரெலா சந்தியாசன்.
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# நுரைச்சோலை மத்திய நிலைய உள்ளக வீதி அபிவிருத்தி பணி!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தின் உள்ளக வீதிக்குக் காப்பெட் இடும் பணிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் கீழ், 47 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதி புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்களின் நீண்டகாலத் தேவைகளை உணர்ந்து, முறையான திட்டமிடலுடன் முன்னெடுத்து வரும் அபிவிருத்திப் பணிகள் வரிசையில் இந்த வேலைத் திட்டம் இடம்பெறுவதுடன்

மக்களின் வரிப்பணத்தை முறையான நிர்வாகத்தின் ஊடாக மக்களுக்கே பயனுள்ள வகையில் மாற்றியமைப்பதில் அரசு என்றும் உறுதியாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்பிட்டி நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையம் 2001 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட போதும் கடந்த 25 வருடங்களாக உள்ளக வீதிகள் எவ்வித புனரமைப்பும் செய்யப்படாது காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் தெற்கு கடல் பகுதியில் படகுகள்!

## 11 சந்தேகநபர்களும் கைதாகினர்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் இலங்கையின் தெற்கு கடற்கரையில் இருந்து ஆழ்கடலில் நெடுந்தூர கப்பல்களைப் பயன்படுத்திக் கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது ஐந்து சந்தேக நபர்கள், போதைப்பொருள் கடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் பல நாள் மீன்பிடிப் படகுகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதே கடல் பகுதியில் நடத்தப்பட்ட கடற்படை நடவடிக்கைகளின் விளைவாகப் போதைப் பொருள் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் மற்றொரு பல நாள் மீன்பிடிப் படகு மற்றும் சாதனங்களுடன் ஆறு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் சந்தேக நபர்கள் மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# மட்டு கல்லடி பால வாவியில் குதித்து 20 வயதான இளம் பெண் உயிரிழப்பு!

## 23 நாள்களில் 16 பேர் அவலச் சாவு
## மக்கள் அச்சத்துடன் கவலை தெரிவிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்லடி பழைய பாலத்தில் இருந்து வாவியில் பாய்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் 20 வயதுடைய இளம் பெண் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது மட்டக்களப்பில் 23 நாள்களில் நடந்த 16 ஆவது உயிரிழப்பு என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் கடந்த 23 தினங்களில் 16 தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மாவட்டத்தில் தொடர்ச்சியான தற்கொலைகள் இடம்பெற்று வருவதையடுத்து பொதுமக்கள் கடும் அச்சத்துடன் கவலையடைந்துள்ளனர்.

தாழங்குடாவைச் சேர்ந்த 20 வயதுடைய இளங்கோ விதுஷாலினி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்லடி பழைய பாலத்தில் இருந்து நேற்று இரவு 7.15 மணியளவில் வாவிக்குள் குதித்துள்ளார். இந்த நிலையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் இதனை கண்டதையடுத்து அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் மற்றும் பொலிஸாருடன் வாவியில் தேடியுள்ளனர்.

நீண்ட நேரத்தின் பின்னர் குறித்த யுவதியை வாவியில் இருந்து சடலமாகக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# இலங்கை தமிழரசுக் கட்சியினரின் தைப்பொங்கல் நிகழ்வு திருமலையில்

(ஹஸ்பர் ஏ.எச்.)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தைப் பொங்கல் நிகழ்வு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை மண்டபத்தில் இன்று இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் மாவட்ட கிளை தலைவருமான சண்முகம் குகதாசன் தலைமையில் இடம் பெற்ற தைப் பொங்கல் நிகழ்வில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மங்கலவாத்தியங்கள்முழங்கவீதிஊர் வலமாக பாரம்பரிய முறைப்படி கலை கலாசார நிகழ்வுகளுடன் குறித்த பொங் கல் விழா விசேடமாக இடம் பெற் றது.










# மண்முனை மேற்கு பிரதேச செயலக பொங்கல் விழா குறிஞ்சாமுனையில்

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு, பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி தலைமையில் வெள்ளிக்கிழமை குறிஞ்சா முனை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

பிரதேச செயலகம், பிரதேச செயலக கலாசார பிரிவு மற்றும் பிரதேசத்திலுள்ள ஆலய திருவரகங்களும் இணைந்து, இப்பொங்கல் விழாவை நடத்தினர்.

பாரம்பரிய முறைப்படி வயலில் நெல் அறுவடை இடம் பெற்று, ஊர்வலமாக நெற்கதிர் கொண்டு வரப்பட்டு, நெல் குற்றி பொங்கள் ஆலயத்தில் இடம் பெற்றது.

இதன்போது, விஷேட பூசை வழிபாடுகளுடன் பொங்கல் வைபவம், இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் போது ஆலய முன்றலில் அறநெறி பாடசாலை மாணவர்களின் நடனம் மற்றும் பாரம்பரிய வயல் அறுவடை பாடல்கள் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.



# சம்மாந்துறை கல்லரிச்சல், மதீனா வீதிகளது திருத்தவேலை ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் மக்கள் பயன்பாட்டுக்குக் கடும் சிரமத்தை ஏற்படுத்தி வந்த சம்மாந்துறை கல்லரிச்சல் மற்றும் மதீனா உம்மா வீதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

சம்மாந்துறை பிரதேச சபை தற்போதைய தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் மாகாண சபை உறுப்பினராகப் பதவி வகித்த காலப் பகுதியில், அவரது முன்மொழிவின் அடிப்படையில், ஐ – வீதி திட்டத்தின் கீழ் இவ்வீதிகள் உள்வாங்கப்பட்டிருந்தன. எனினும், தொழில்நுட்ப காரணங்களால் இத்திட்டம் நீண்ட காலமாகத் தாமதமடைந்து நிலுவையில் இருந்தது.

இந்த நிலையில், பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிரின் விசேட தலையீடு மற்றும் உரிய அனுமதிகளின் பேரில், வீதி புனரமைப்புக்கான தடைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன.



இதன் முதற்கட்டமாக, குறித்த வீதிகளின் தற்போதைய நிலைமைகளை ஆய்வு செய்து தேவையான பரிந்துரைகளை வழங்கும் கள விஜயம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

அந்த விஜயத்தின் போது, பிரதேச சபை உறுப்பினர்களான நயீம் ஆசிரியர், பஹ்மி சுலைமாலெப்பை, வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன்போது பிரதேச மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளும் கேட்டறியப்பட்டன.








# மட்டு. சிவானந்தாவின் நூற்றாண்டு கால்கோள் விழா தூபி இன்று திறப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளார் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்துக்கு அடிக்கல் நட்டு இன்று சனிக்கிழமையுடன் நூறு வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன.

அதனை முன்னிட்டு அந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் வகையில் நூற்றாண்டு கால்கோள் விழாத் தூபி இன்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இன்றுகாலைகல்லடிபாலத்துக்குஅருகாமையில் சுவாமி விவேகானந்தர் மற்றும் சுவாமி விபுலானந்தர் அடிகளார் ஆகியோரின் சிலைகளின்பாதங்களுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹறராஜ் மலர் மாலை அணிவித்து ஊர்வலம் ஆரம்பமாகியது.

அந்த ஊர்வலம் கல்லடி சித்திவிநாயகர் ஆலயத்துக்குச் சென்று அங்கு வழிபாடுகள் இடம்பெற்றது.

அதன் பின்னர் இராமகிருஷ்ண மிஷனை அடைந்து வழிபட்டு, பின் கல்லடி உப்போடை சித்திவிநாயகர் மற்றும் பேச்சியம்மன் ஆலயங்களுக்கும் சென்று வழிபாடுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் சமாதிக்கு மலர் மாலை அணிவித்து பாடசாலையை வந்தடைந்து சுவாமிகளின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

அங்கு பாடசாலையினை ஆரம்பிக்க நிலம், நிதி உதவி செய்த வள்ளல்களின் படங்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு அதன் பின்னர் பாடசாலையில் அமைக்கப்பட்ட கால்கோள் நூற்றாண்டு விழா தூபி திறக்கப்பட்டது.





நா.உசாந்தினி
3 ஆம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# சிறுவர்களின் நடத்தை மாற்றத்தில் குடும்பத்தின் பங்களிப்பு

சிறுவர்களின் சமூகத்துக்கு எதிரான நடத்தை என்பது சமூகத்தின் நெறிமுறைகள் அல்லது விதிகளை மீறி நிகழும் செயற்பாடாகும் குறிப்பாக உலக சுகாதார நிறுவனத்தின் தகவலின் படி 15 தொடக்கம் 18 வயதினருக்கிடையே சமூகத்துக்கு எதிரான நடத்தைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நடத்தையில் குடும்பம், கல்வி , பொருளாதார , மற்றும் உளவியல் காரணிகள் என்பன செல்வாக்கு செலுத்துகின்றன.

சிறுவர்கள் என்பது ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கியமான வளமாகும். ஆனால் சமீப காலங்களில் சிறுவர்கள் மத்தியில் காணப்படுகின்ற நடத்தை மாற்றத்தில் குடும்பமானது பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பாகப் போதைப் பொருள் பழக்கம், வன்முறை, குற்றச் செயல்கள், பாடசாலை விலகல் போன்ற சமூக எதிர் நடத்தையில் இருந்து விலகுவதற்கு பல காரணிகள் இருந்தாலும், அவற்றில் குடும்ப காரணிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு குழந்தையைச் சமூகமயமாக்குவதில் குடும்ப உறவே முக்கிய பங்காற்றுகிறது. இந்த உறவில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் பிளவுகள் சிறுவர்களை சமூக விரோத நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லுகின்றது.

### பெற்றோரின் புறக்கணிப்பும் நிராகரிப்பும்

பிள்ளையின் உணர்ச்சிகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்யாமல், உடல் ரீதியாகவோ, உணர்ச்சி ரீதியாகவோ அல்லது கல்வி ரீதியாகவோகவனிக்காமல்இருப்பதைத்தூண்டுகின்றன. உதாரணமாகக் குழந்தைக்குத் தேவையான பாசத்தையோ, பாராட்டையோ, அல்லது வழிகாட்டுதலையோ பெற்றோர் வழங்காதபோது, அந்தக் குழந்தை தன்னைத் தாழ்வாகவும், யாருக்கும் தேவையில்லாதவராகவும் உணர ஆரம்பிப்பார்.

அதாவது ஒரு சிறுவன் தனது பெற்றோருடன் பேசுவதற்கு முயற்சிக்கும்போது அவர்கள் தொடர்ந்து வேலையில் கவனம் செலுத்தி அவர்களைப் புறக்கணித்தால், அவர்கள் மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் பாடசாலையில் சண்டையிடுவது அல்லது பொருள்களைத் திருடுதல் போன்ற சமூகத்துக்கு எதிரான நடத்தைகளில் தூண்டப்படுகிறார்கள்.

பெற்றோருக்கிடையே அல்லது குடும்ப உறுப்பினர்களிடையே தொடர்ந்து ஏற்படும் சண்டை, சச்சரவுகள் மற்றும் வாய்மொழி அல்லது உடல் ரீதியான வன்முறைகளும் சிறுவர்கள் பிறழ்வு நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றன. குறிப்பாக குடும்பத்தில் ஏற்படும் தொடர்ச்சியான மோதல், பிள்ளைகளுக்குப் பாதுகாப்பற்ற உணர்வையும், கோபத்தை வெளிப்படுத்த வன்முறையே சரியான வழி என்ற தவறான கற்றலையும் கொடுக்கிறது. தந்தை தினமும் தாயை அடிப்பதையோ அல்லது கடுமையான வார்த்தைகளால் திட்டுவதையோ பார்க்கும் ஒரு சிறுவன், தனது பாடசாலைச் சூழலில் சவால்கள் வரும்போது பேச்சுவார்த்தைக்குப் பதிலாக சண்டை அல்லது கோபமான எதிர்வினைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுகிறான்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்க்கப் பயன்படுத்தும் முறைகளும், ஒழுங்குபடுத்தும் விதமும் சமூக எதிர் நடத்தையை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும் அதாவது போதிய கண்காணிப்பு இன்மை சமூக நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றன .

பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியேயும், வீட்டுக்கு உள்ளேயும் எங்கே இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள், யாருடன் பழகுகிறார்கள் என்பதைக் கண்காணிக்காமல் இருக்கும் போது சிறுர்கள் தங்களின் நண்பர்கள் குழுவால் தவறாக வழிநடத்தப்படுவதற்கான அபாயம் அதிகரிக்கிறது. குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெற்றோர், மாலை நேரங்களில் வேலை முடித்து வீடு திரும்புவார்கள். இதனால் தங்களது பிள்ளைகளின் நடவடிக்கைகளைச் கண்காணிக்காமல் சரிபார்க்காமல், அவர்கள் வீட்டுப் பாடம் செய்கிறானா அல்லது சமூக விரோத நண்பர்களுடன் வெளியே செல்கின்றார்களா என்பதைக் கவனிக்காமல் இருந்தால், அவன் அந்த நண்பர்களின் தூண்டுதலின் பேரில் திருட்டு அல்லது போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது.

ஒரே தவறுக்கு வெவ்வேறு நேரங்களில் வழங்கப்படுகின்ற தண்டனைகளும் சமூக எதிர் நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றன. குறிப்பாகச் சிறிய தவறுகளுக்குக்கூட மிகக் கடுமையான தண்டனைகளை வழங்குவதலும் இளையோர் பிறழ்வு நடத்தை ஏற்படுகிறது.

சீரற்ற ஒழுங்குமுறை, எது சரி, எது தவறு என்பதில் சிறுவர்களுக்கு தெளிவின்மையை உருவாக்குகிறது. கடுமையான தண்டனை, பிள்ளைகளை அச்சத்தில் ஆழ்த்துவதோடு, பெற்றோர் மீதுள்ள அன்பைக் குறைத்து, கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக ஒரு நாள் பாடசாலையால் தாமதமாக வரும் சிறுவனை அவனது பெற்றோர் கண்டுகொள்ளாமல் விடுவது, ஆனால் மற்றொரு நாள் அதே தாமதத்துக்கு அவனைக் கடுமையாகஅடித்துத்தண்டிப்பதுபோன்றவைசிறுவர்களை தவறுக்கான விளைவுகளைப் புரிந்து கொள்ள முடியாமல், பெற்றோரைக் கோபப்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகப் பொய் சொல்ல

தொடர்ச்சி





# சிறுவர்களின் நடத்தை மாற்றத்தில் குடும்பத்தின் பங்களிப்பு

தொடர்ச்சி

தூண்டுவதற்கு முக்கிய காரணம் ஆகும். குடும்பத்தின்சமூகப்பொருளாதாரநிலை,உறுப்பினர்களின் நடத்தை போன்ற வெளிப்புறக் காரணிகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சிறுவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை முன்மாதிரியாகக் கருதுகின்றனர். குடும்பத்தில் குற்றச் செயல்கள் அல்லது போதைப் பொருள் பாவனை சாதாரணமாக இருந்தால், சிறுவர்களும் அதைப் பின்பற்ற அதிகம் தூண்டப்படுகிறார்கள் குறிப்பாக அண்ணன் ஒருவன் தெருச் சண்டைகளிலும், சிறு குற்றங்களிலும் ஈடுபட்டு வந்தால், தம்பி அதை ஒரு துணிச்சலான, கௌரவமான செயலாகப் பார்க்கக்கூடும். இந்தச் சூழலில் வளரும் சிறுவன், எளிதில் அதே பாதையைப் பின்பற்ற ஆரம்பிக்கிறான் இதன் காரணமாக அவன் குற்றச்செயலில் ஈடுபட தூண்டப்படுகின்றான்.

வறுமை நேரடியாகப் பிறழ்வு நடத்தையைத் தூண்டவில்லை என்றாலும், இது அதிக மன அழுத்தம், குறைந்த கல்வி வாய்ப்புகள், மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற பல காரணிகளுக்கு வழிவகுக்கிறது. பெற்றோர்கள் அதிக நேரம் வேலை செய்ய வேண்டியிருப்பதால் கண்காணிப்பும் குறையலாம். உதாரணமாக மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் வளரும் ஒரு சிறுவன் , தனக்குச் சமமான வசதியுள்ள நண்பர்களைப் போல வாழ ஆசைப்படும்போது, அந்த ஆசையை உடனடியாகப் பூர்த்தி செய்வதற்காக திருட்டு அல்லது சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடலாம். இந்தக் குடும்பக் காரணிகள், சிறுவர்களை வெளியுலகில் உள்ள பிறழ்வு நடத்தையுள்ள நண்பர்கள், பாடசாலை சிக்கல்கள் மற்றும் சமூகச் சூழல் போன்ற பிற அபாயக் காரணிகளுடன் எளிதில் பிணைக்கின்றன, இதனால் இளங்குற்றவாளியாக மாறும் நிலை அதிகரிக்கின்றது.

சிறுவர்களின் நடத்தையில் ஊடகத்தின் தாக்கமும் முக்கிய பங்காற்றுகின்றது. இன்றைய உலகம் டிஜிட்டல் தொடர்புகள் மற்றும் ஊடகங்களால் ஆனது. ஊடகங்கள் மனிதர்களின் சிந்தனை, தொழில், நெறிமுறைகள், கலாச்சாரம் மற்றும் மனப்போக்குக்கும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றன.

இன்றைய இளையோர் அதிகமாக டெலிவிஷன், மொபைல் போன், இணையம், யூடியூப், டிக் டாக், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், விளையாட்டு வீடியோ கேம்கள், வலைப்பதிவுகள், இணையத் தொடர்கதைகள் மற்றும் இசைத் தட்டுகள் போன்ற பல்வேறு ஊடக வழிகளை பயன்படுத்துகின்றனர். இவற்றின் பயன்பாடு சில சமயங்களில் அறிவை வளர்க்கும், திறமையை ஊக்குவிக்கும், உலகறிவை மேம்படுத்தும் விதமாக இருந்தாலும், சில சமயங்களில் சமூக நெறிகளுக்கு புறம்பான நடத்தை மாற்றத்தை அதிகரிக்கக் காரணமாகின்றது. இதனை விட பெற்றோர்கள் தாங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்ற போது, சிறு பிள்ளைகளுக்கு தமது தொலைபேசியை கொடுத்துவிட்டு செல்கிறார்கள் தங்கள் வேலைகளுக்கு பின்னர் அந்த சிறுவர் தொடர்ந்தும் அந்த தொலைபேசியை பயன்படுத்துகின்ற போது, தொலைபேசிக்கு அடிமையாகி விடும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

இவ்வாறான பிரச்சினைகள் இருப்பினும் சில தீர்வுகளும் காணப்படுகின்றன. குடும்பத்துக்கு இடையில் நல்ல தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்களுக்கும் சிறுவர்களுக்கும் இடையே திறந்த மன உரையாடல் நிலவுகின்ற போது, சிறுவர்கள் தங்களின் பிரச்சினைகள் மற்றும் மனஅழுத்தங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். இது அவர்களை தவறான பாதைகளிலிருந்து மீட்க உதவுகின்றன.

பெற்றோர் சரியான வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பை வழங்க வேண்டும். குறிப்பாக சிறுவர்களில் எதிர்ப்பு மனப்பாங்கை உருவாக்கலாம். அதேசமயம் முழுமையான சுதந்திரமும் தவறான பழக்கங்களுக்கு வழிவகுக்கும். எனவே நம்பிக்கையுடனான வழிகாட்டல் அவசியமாகும். உடல் மற்றும் மன ரீதியான வன்முறைகள் சிறுவர்களின் உளநலனைக் கடுமையாகப் பாதிக்கும் வகையில் முன்னெடுப்பதைத் தவிர்த்து, அமைதியான மற்றும் பாதுகாப்பான குடும்ப சூழல் உருவாக்கப்படும்போது, சிறுவர்களிடையே பிறழ்வு நடத்தைகள் குறைவடையும்.

பெற்றோருக்கான விழிப்புணர்வு மற்றும் கல்வி மிக முக்கியமானதாகும். குறிப்பாக சிறுவர்கள் உளவியல், வளர்ச்சி நிலைகள், மன அழுத்த மேலாண்மை போன்ற விடயங்களில் பெற்றோர் அறிவு பெற்றால், அவர்கள் தங்கள் பிள்ளைகளைச் சிறந்த முறையில் வழிநடத்த முடியும். பெற்றோர்கள் தாமே சிறந்த முன்மாதிரிகளாக செயற்பட வேண்டும். பெற்றோரின் நடத்தை, பேச்சு, பழக்கங்கள் ஆகியவை சிறுவர்களின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே நல்ல ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் சமூக மதிப்புகளை பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டும்.

சிறுவர்களின் பிறழ்வு நடத்தையை கட்டுப்படுத்துவதில் குடும்பத்தின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். குடும்ப சூழல் ஆரோக்கியமாகவும் ஆதரவாகவும் மாற்றப்படும் போது, சிறுவர்களின் மனநலம் மேம்பட்டு, அவர்கள் சமூகத்துக்குப் பொறுப்பான குடிமக்களாக உருவெடுப்பார்கள். எனவே குடும்பம், சமூகம் மற்றும் அரசு ஆகிய மூன்றும் இணைந்து செயல்படுவதன் மூலம் சமூகத்துக்கு எதிராக மாறும் சிறுவர்களைக் குறைத்து கொள்ள முடியும்.

# பெண்களுக்கு பாதுகாப்பான ஆட்சி: தமிழ் நாட்டில் பிரதமர் மோடி உறுதி

ஊழல், போதை, குற்றங்கள் ஆகியவற்றின் பிடியில் இருந்து தமிழகத்தை விடுவித்து, பெண்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியை வழங்குவோம் என்று மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்.டி.ஏ) தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"தமிழகம் ஒரு மாற்றத்துக்கு தயாராகிவிட்டது. தி.மு.கவின் மோசமான ஆட்சியில் இருந்து விடுபட துடிக்கிறது. பா.ஜ.கவின் என்.டி.ஏ. அரசைத்தான் தமிழகம் இப்போது விரும்புகிறது. தமிழகத்தில் இருந்து தி.மு.க. அரசை விரட்டி அடிக்க, தி.மு.க. ஆட்சியின் முடிவு ரைக்கான 'கவுன்ட் டவுன்' தொடங்கி விட்டது.

தமிழக மக்களுக்கு தி.மு.க. அரசு நம்பிக்கை துரோகம் செய்துவிட்டது. தி.மு.க. அரசை 'சி.எம்.சி' அரசு என்று மக்கள் அழைக்கின்றனர். அதாவது, 'கரப்ஷன் - மாஃபியா - க்ரைம்'. தி.மு.க. அரசு ஊழல், குற்றவாளிகுழுக்கள், குற்றங்கள் ஆகியவற்றைதான் ஆதரிக்கிறது. அதனால், தி.மு.க. மற்றும் 'சி.எம்.சி' ஆகிய இரண்டையுமே கிள்ளி எறிய வேண்டும் என்று



தமிழக மக்கள் தீர்மானித்துவிட்டனர்.

தங்களது ஒரே ஒரு குடும்பத்துக்காக மட்டுமே திமுக அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது. வாரிசு அரசியல், ஊழல், பெண்களை அவதூறாகப் பேசுவது, கலாச்சாரத்தை வசைபாடுவது போன்றவற்றை தொடர்ச்சியாக செய்கின்றனர். தி.மு.கவின் கொடூரமான பிடியில் இருந்து தமிழகத்தை விடுவித்தாக வேண்டும். கடந்த 11 ஆண்டுகளில் மத்திய என்.டி.ஏ. அரசு அதிகார பகிர்வு வாயிலாக மட்டுமே தமிழகத்துக்கு சுமார் 3 லட்சம் கோடி இந்திய ரூபா அளித்துள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு முன்பு மத்திய காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி ஆட்சியில் வழங்கியதைவிட இது 3 மடங்கு அதிகம். அதேபோல, தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு 7 மடங்கு அதிக நிதி அளித்துள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் தமிழக மக்களின் நலனுக்காக மத்திய அரசு 11 லட்சம் கோடி இந்திய ரூபா உதவிகளை அளித்துள்ளது.

போதைப் பொருள் குற்றங்களைச் செய்யும் மாஃபியா கும்பலிடம் இளைஞர்களை விட்டுவிட்டது தி.மு.க. அரசு. தங்கள் கண்முன்பு குழந்தைகள் சீரழிவதைப் பார்த்து பெற்றோர் துடிக்கின்றனர். இளைஞர்களை போதைப் பொருள் அபாயத்தில் இருந்து மீட்க வேண்டும். நீங்கள் என்.டி.ஏவுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழகத்தை போதை அபாயத்தில் இருந்து மீட்டெடுக்க உதவும்.

தமிழகத்தில் பா.ஜ.க - என்.டி.ஏவின் இரட்டை இன்ஜின் அரசு அவசியமானதாகும். மத்திய அரசோடு இணைந்து பயணிக்கும்போது, முதலீடுகள், வளர்ச்சி அனைத்தும் எளிதாக நடைபெறும். உங்கள் வாக்குகளால் தமிழகத்தில் என்.டி.ஏ. அரசை அமைத்துத் தாருங்கள். எங்கள் அரசு பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

சமீபத்தில் முருகப் பெருமானுக்கு கார்த்திகை தீபம் ஏற்றும் விஷயத்தில் நம் தலைவர்கள் எல்லாம், பக்தர்களின் அதிகாரங்கள், உரிமைகளுக்கு குரல் கொடுத்தனர். ஆனால், தி.மு.கவும், அதன் கூட்டணியும் தங்களது வாக்கு வங்கியை குஷிப்படுத்த நீதிமன்றங்களையும் விட்டுவைக்காமல், அவர்களையும் அவமானப்படுத்தின. தமிழக இளைஞர்கள் அனைவரும் நமது பாரம்பரியத்தைக் கொண்டாடி மகிழ வேண்டும். அதற்கு என்.டி.ஏ. அரசு அனைத்து வழிகளிலும் துணை நிற்கும்." என்று தெரிவித்தார்.

# தமிழகத்தின் ஊரக வேலைத் திட்டத்துக்கு 2,113 கோடி ரூபாவை விடுவிக்கவில்லை

## *சட்டப்பேரவையில் முதல்வர் விமர்சனம்*

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் தமிழகத்துக்குத் தரவேண்டிய 2,113 கோடி இந்திய ரூபாவை மத்திய அரசு இன்னும் விடுவிக்கவில்லை என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசின் புதிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அரசினர் தனித் தீர்மானத்தை பேரவையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று கொண்டு வந்தார். அப்போது தீர்மானத்தை முன்மொழிந்து அவர் உரையாற்றுகையில்,

"மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் தமிழகத்தில் பாகுபாடின்றி செயல்படுத்தப்படுகின்றன.

ஆனால், எந்தத் திட்டமானாலும், பணிக்கு ஏற்ப உரியநிதியை விடுவிக்காமல் தாமதம் செய்து, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறது. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலும் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடும்போது, 2025-26-ல் தொழிலாளர் மதிப்பீடு மற்றும் நிதி ஒதுக்கீடு குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் 1,026 கோடி இந்திய ரூபா ஊதியத்துக்கான தொகையும், 1,087 கோடி இந்திய



ரூபா பொருள் கூறுக்கான தொகையும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

அதேபோல, வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் உயிர்நீர் திட்டத்தில் 3,112 கோடி இந்திய ரூபா, பிரதமர் கிராமச் சாலை திட்டத்தில் 516 கோடி இந்திய ரூபா இன்னும் தரப்படவில்லை. இதனால், தமிழகத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் எளிய மக்கள், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். தற்போது கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ள வி.பி-ஜி ராம் ஜி எனும் மத்திய அரசின் புதிய திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

ஏற்கெனவே இருந்த 100 நாள் வேலை திட்டத்தால் தமிழகத்தில் ஆண்டுதோறும் 74 லட்சம் தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தனர். இதில் 85 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் ஆவர். ஊரகவேலை உறுதித் திட்டம் மகாத்மா காந்தி பெயரிலேயே தொடர வேண்டும். வேலைக்கான வழிமுறையை மாநில அரசே வகுத்துக் கொள்ள வழிசெய்ய வேண்டும். இதுகுறித்து பிரதமர் மோடிக்கும் கடிதம் எழுதியுள்ளேன். இதுபற்றி பிரதமர் மோடியிடம் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பேச வேண்டும். பேசுவார் என நம்புகிறேன்." என்று தெரிவித்தார்.



# ஜப்பானிய நாடாளுமன்றம் கலைப்பு: பெப்ரவரி 8 ஆம் திகதி பொதுத்தேர்தல்

ஜப்பானின் முதல் பெண் பிரதமரான சனே தகாச்சி, அந்நாட்டின் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு இடைக்காலப் பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியாகியுள்ள நிலையில், ஆசியப் பிராந்தியத்தில் அரசியல் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஜப்பானிய நாடாளுமன்றத்தின் கீழ் சபையை கலைப்பதற்கான கடிதத்தை சபாநாயகர் நேற்று வாசித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி 08 ஆம் திகதி தேர்தல் இடம்பெறவுள்ளதுடன், ஜனவரி 27 முதல் 12 நாள்களுக்கு உத் தியோகபூர்வ பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

கடந்த ஒக்டோபர் மாதம் பிரதமராகப் பதவியேற்ற சனே தகாச்சி, வெறும் மூன்று மாதங்களிலேயே தேர்தலை எதிர்கொள்கிறார்.



# மேற்கு வங்க ராமர் கோயில்: 2028 இல் கட்டி முடிக்கத் திட்டம்

மேற்கு வங்க மாநிலத்தில் 'பெங்கால் ராமர்' என்ற பெயரில் ஒரு ராமர் கோயில் அமைக்கப் படவுள்ளது. 100 கோடி இந்திய ரூபா செலவில் அமைக்கப்பட உள்ள இக் கோயிலுக்கான கட்டுமான பணிகள் 2028 ஆம் ஆண்டு முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரிணமூல் காங்கிரஸ் கட்சி (டி.எம்.சி) தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி ஆட்சியில் இருப்பது மேற்கு வங்க மாநிலம். இங்கு சில மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இச்சூழலில், இம்மாநிலத்திலும் கோயில், மசூதி அரசியல் நிலவி வருகிறது.

டி.எம்.சியில் (திரிணமூல் காங்கிரஸ் கட்சி) இருந்து நீக்கப்பட்ட எம்எல்ஏவான ஹுமாயூன் கபீர் தனது முர்ஷிதாபாத் மாவட்டத்தில் பாபர் மசூதி கட்டி வருகிறார். முதல்வரான மம்தா, தன் மாநிலத்தில் துர்கா மற்றும் மகா காளி கோயில்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்நிலையில், உத்தரப்பிரதேசம் அயோத்தியைப் போல், நதியா மாவட்டத்தின் சாந்திப்பூரில் ஒரு ராமர் கோயில் கட்டப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இக்கோயில் 100 கோடி இந்திய ரூபா செலவில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட உள்ளதாகவும், வரும் 2028 ஆம் ஆண்டிற்குள் கோயில் கட்டி முடிக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது.



# ஈரான் தொடர்பில் அமெரிக்கா புதிய தடைகளை விதித்தது

ஈரான் தொடர்பாக அமெரிக்கா புதிய தொடர் தடைகளை விதித்துள்ளது. ஈரான் தனது எண்ணெய் ஏற்றுமதிகளை முன்னெடுக்கப் பயன்படுத்துவதாகக் கூறப்படும் சட்டத்திற்கு புறம்பான கப்பல்களை இந்தத் தடைகள் இலக்கு வைத்துள்ளன.

ஈரானில் போராட்டக்காரர்கள் மீது அரசாங்கம் நடத்திய கொடூரமான ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு பதிலடி அளிக்கும் வகையில் 09 எண்ணெய் கப்பல்கள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் அல்லது நிர்வாக நிறுவனங்கள் மீதான தடைகளை அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

தடை விதிக்கப்பட்டுள்ள இந்த 09 கப்பல்களும் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர் மதிப்புள்ள ஈரானிய எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களைக் கூட்டாக வெளிநாட்டுச் சந்தைகளுக்கு விநியோகம் செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தரப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் பிராந்திய பயங்கரவாத முகவர்கள், ஆயுதத் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படுவதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

அறிக்கை ஒன்றில், அமெரிக்க கருவூலச் செயலாளர் ஸ்காட் பெசென்ட் குறிப்பிடுகையில், ஈரான் அரசாங்கம் திருடியதும், ஈரானுக்கு வெளியே உள்ள வங்கிகளுக்கு அவசரமாகப் பரிமாற்றம் செய்ய முயற்சிப்பதுமான கோடிக்கணக்கான டொலர்களை கருவூலத் துறை தொடர்ந்து கண்காணிக்கும் என பதிவு செய்துள்ளார்.

ஈரானில் விலைவாசி உயர்வைக் கண்டித்து தெஹ்ரானில் உள்ளக் கடைக்காரர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம், பின்னர் திடீரென்று நாடு முழுவதும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமாக வெடித்தது.

இரண்டு வாரங்கள் நீடித்த இந்தப் போராட்டங்களை ஒடுக்கும் வகையில் அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளால் 3,117 பேர் கொல்லப்பட்டதாக ஈரானிய அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில், போராட்டங்களின் போது 4,519 பேர் கொல்லப்பட்டனர். இதில் 4,251 பொதுமக்கள், 197 பாதுகாப்புப் பணியாளர்கள், 18 வயதுக்குட்பட்ட 35 பேரும், போராட்டக்காரர்களோ அல்லது பாதுகாப்புப் படையினரோ அல்லாத 38 வழி போக்கர்களும் அடங்குவர் என்று கூறியுள்ளது.

மட்டுமின்றி, போராட்டங்களின் போது கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்று ஈரான் உறுதியளித்திருந்தது.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த இராணுவ நடவடிக்கை அச்சுறுத்தலை அடுத்து ஈரான், போராட்டக்காரர்கள் மீதான நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளது.

# ஈரான் மீது கடுமையான பதிலடி தாக்குதல் உறுதி

## இஸ்ரேல் பொருளாதார அமைச்சர் எச்சரிக்கை

தங்களை மீண்டும் சீண்டினால் ஈரான் மீது கடுமையான பதிலடி தாக்குதல் உறுதி என்று இஸ்ரேலின் பொருளாதார அமைச்சர் நிர் பர்கத் எச்சரித்துள்ளார்.

அத்துடன், காஸா இடைக்காலப் படையில் முஸ்லிம் பெரும்பான்மை நாடான பாகிஸ்தானின் பங்கேற்பு சாத்தியமில்லை என்பதையும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பர்கத் தெரிவிக்கையில், நாங்கள் அவர்களை ஒருமுறை குறிவைத்தோம், அவர்களைக் கடுமையாகத் தாக்கினோம், அவர்கள் எங்களுடன் இனி சண்டைக்கு வந்தால்,



அவர்களை ஏழு மடங்கு கடுமையாகத் தாக்குவோம் என்றார்.

காஸா தொடர்பில் அமையவிருக்கும் அமைதி காக்கும் படைகள் குறித்து குறிப்பிட்ட அவர், பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் எந்த நாடும் வரவேற்கப்படாது. அதில் பாகிஸ்தானும் அடங்கும் என்றார்.

பல தசாப்தங்களாக ஆயுதமேந்திய கூலிப்படைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் மத்திய கிழக்கை ஸ்திரமற்ற தாக்குவதாக பர்கத் ஈரான் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், ஈரானின் இராணுவ பலத்தை குறைமதிப்பிட்ட பர்கத், நாங்கள் அவர்களைக் கடுமையாகப் பலவீனப்படுத்தினோம். அவர்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தினோம். மேலும் அவர்கள் நினைத்தது போல் அவ்வளவு பெரியவர்களும் வலிமையானவர்களும் அல்ல என்பதையும் நிரூபித்தோம் என்றார்.

கனடா முரசு

சனிக்கிழமை 24/01/2026

**கனடா குளிர்கால புயல் எச்சரிக்கை; நாளை 30 செ.மீ. வரை பனிப்பொழிவு**

டொராண்டோவில் மஞ்சள் நிற குளிர்கால புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களத்தின் தகவலின்படி, ஞாயிற்றுக் கிழமை 20 முதல் 30 செ.மீ. வரை பனி 02▶



# கனடா ஆயுதப்படைகளில் சேர விண்ணப்பங்கள் அதிகரித்தன

பல ஆண்டுகளாக இலக்குகளை எட்ட முடியாமல் இருந்த கனடா ஆயுதப் படைகள் தற்போது ஆட்சேர்ப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளன.

பணியாளர் பற்றாக்குறை, ஊதிய குறைகள் மற்றும் நீண்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் காரணமாக புதிய உறுப்பினர்களை ஈர்க்க முடியாமல் இருந்த நிலையில், தற்போது விண்ணப்பங்கள் அதிகரித்து வருவது இராணுவத்திற்கு ஒரு முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

2025-26 நிதியாண்டில் இதுவரை நிரந்தர படைப்பிரிவுக்கான விண்ணப்பங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது சுமார் 13 சதவீதம் உயர்ந்துள்ளன. 02▶

# சிறுமிக்கு பாலியல் தொல்லை; இந்திய வம்சாவளி இளைஞர் கைது

கனடாவில் இந்திய வம்சாவளி இளைஞர் ஒருவர் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தை சேர்ந்த யுவராஜ் சிங் என்ற 22 வயது இந்திய வம்சாவளி இளைஞர் கடந்த 2025 ஆம் ஆண்டு ஆறு சிறுவர்களுடன் விடுதி ஒன்றில் பிடிபட்டார்.

ஏப்ரல் 24, 2025 ஆம் ஆண்டு லெத்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்கு விடுதி அறையில் உள்ள பொருள்களை மீட்பது தொடர்பாக வந்த உதவி கோரிக்கையின் அடிப்படையில் சோதனை நடத்தினர்.

அப்போது யுவராஜ் சிங் என்ற இளைஞர் 12 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட 5 சிறுமிகள் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 6 சிறுவர்க 02▶






# கேலிடனில் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலி

கனடாவின் ஒன்டாரியோ மாகாணம் கேலிடன் பகுதியில் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில், ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒன்டாரியோ மாகாண பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த விபத்து ஹைவே 9-இல், ஹைவே 50 மற்றும் டாட்டன்ஹாம் ரோடு இடையிலான பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திலேயே ஒரு சாரதி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப் படுகின்றது.

மற்றொரு சாரதி சிறிய காயங்களுடன் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான விசாரணை காரணமாக, 'ஹைவே' 9 பல மணி நேரங்கள் மூடப்பட்டிருந்தது.

விசாரணை முடிந்த பின்னர், அந்தச் வீதி மீண்டும் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## கனடா குளிர்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெய்யக்கூடும். மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் வீசக்கூடிய காற்றின் காரணமாக பனி பறந்து, சில நேரங்களில் பார்வைத் தூரம் குறையலாம்.

இந்த புயல் எச்சரிக்கையுடன் சேர்ந்து, சில நேரங்களில் காற்று குளிர்ச்சி -30°C வரை உணரப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நகரம் முழுவதும் வெப்பமூட்டும்மையங்கள் திறக்கப்பட்டுள்ளன

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன் ஆண்டில், புதிய ஆள் சேர்ப்புகள் 55 சதவீதம் உயர்ந்ததாகவும், 2025 டிசம்பர் வரை 6,700 பேர் நிரந்தர படைப்பிரிவில் இணைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இது கடந்த ஒரு தசாப்தத்தில் பதிவான அதிகபட்ச சேர்க்கையாகும். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கிரீன்லாந்தை கைப்பற்றுவது குறித்த கருத்துகளையும், ஆர்க்டிக் பகுதியின் தேசிய பாதுகாப்பு முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ள நிலையில், இந்த ஆட்சேர்ப்பு உயர்வு கூடுதல் கவனம் பெற்றுள்ளது.

இருப்பினும், கனடாவின் தெற்குப் பக்க அண்டை நாட்டுடனான பதற்றமே இதற்கான நேரடி காரணம் என கூறுவதில் இராணுவம் தயக்கம் காட்டியுள்ளது.

விண்ணப்பங்கள் அதிகரிப்பதை ஒரு குறிப்பிட்ட சம்பவத்துடன் நேரடியாக இணைப்பது கடினம். கடந்த நான்கு ஆண்டுகளாக உருவாகி வந்த போக்கின் தொடர்ச்சியே இந்த உயர்வு என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறுமிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் இருப்பதை பொலிஸார் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சமூக ஊடகங்கள் மூலம் இந்த சிறுவர்களுடன் தொடர்பு கொண்ட யுவராஜ் சிங், அவர்களை பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்றதோடு இறுதியில் விடுதி அறையில் வைத்து மது வழங்கியதாக கூறப்படுகிறது. மேலும் இதில் ஒரு சிறுமிக்கு யுவராஜ் சிங் பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணையின் போதே, கனடாவை விட்டு யுவராஜ் சிங் தப்பிச் சென்றார். இதையடுத்து அவருக்கு நாடு தழுவிய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் யுவராஜ் சிங் மீண்டும் கனடாவுக்கு திரும்பிய போது கடந்த 19 ஆம் திகதி வான்கூவர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியா காவலில் தற்போது யுவராஜ் சிங் வைக்கப்பட்டுள்ளார்.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் பர்னபி நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலாக இருக்கலாம் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனடா வே - ஸ்மித் அவென்யூ சந்திப்புக்கு அருகே துப்பாக்கிச் சத்தம் கேட்கப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பலத்த காயங்களுடன் இருந்த ஒருவரை மீட்டுள்ளனர்.

உயிரைக்காப்பாற்றமுயற்சித்தபோதும், அந்த நபர் உயிரிழந்தார் என பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவில், பக்ஸ்டன் ஸ்ட்ரீட் 5000 ஆம் தொகுதியில் எரிந்து கொண்டிருந்த ஒரு வாகனத்தை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அந்த வாகனம் இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதா என்பதை விசாரணை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

விசாரணை இன்னும் ஆரம்பகட்டத்திலேயே உள்ளது. இருப்பினும், இந்த துப்பாக்கிச் சூடு குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலாக இருக்கலாம் என நம்பப்படுகிறது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






